இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் கவலையற்றவர்களாய் இருக்க வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். மணமாகாதவர் ஆண்டவருக்கு உரியவற்றில் அக்கறை கொள்கிறார்; எப்படி அவருக்கு உகந்தவற்றைச் செய்யலாம் என எண்ணிக் கொண்டிருக்கிறார். ஆனால் மணமானவர் உலகுக்கு உரியவற்றில் அக்கறை கொள்கிறார்; எப்படித் தம் மனைவிக்கு உகந்தவற்றைச் செய்யலாம் என எண்ணிக்கொண்டிருக்கிறார். இவ்வாறு அவர் மனம் பிளவுபட்டுள்ளது. மணமாகாத பெண்ணும் கன்னிப் பெண்ணும் ஆண்டவருக்கு உரியவற்றில் அக்கறை கொள்வதால் அவர்கள் உடலிலும் உள்ளத்திலும் தூயோர் ஆகின்றனர். (1 கொரி 7:32-33)

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்

# கிறிஸ்தவர்கள் முழு ஒன்றிப்பை அடைய இறைவேண்டல் செய்வோம்!

### கருப்பொருள்: ‘உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக’

**வத்திக்கான்:** ஒன்றிணைந்து வளர்வதற்கு இறைவார்த்தை நமக்கு அழைப்புவிடுக்கிறது என, இம்மாதம் 21ஆம் தேதி சிறப்பிக்கப்பட்ட இறைவார்த்தை ஞாயிறுக்கும், 18ஆம் தேதி முதல் 25 வரை கொண்டாடப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்திற்கும் தயாரிப்பாக டுவிட்டர் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நாம் நம்மை பிறருக்கு மூடாதிருக்கவும், நம்மால் எதையும் தனியாகச் செய்துவிடமுடியும் என எண்ணாதிருக்கவும், அதேவேளை ஒன்றிணைந்து வளரவும் இறைவார்த்தை நமக்கு அழைப்புவிடுக்கிறது, என ஜனவரி 16, செவ்வாய்க்கிழமையன்று வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் ஒருவருக்கொருவர் செவிமடுப்போம், கலந்துரையாடுவோம் மற்றும் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்போம் என மேலும் அதில் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ ஒன்றிப்பு என்ற ஹேஷ்டாக்குடன் வெளியிடப்பட்டுள்ள இந்த டுவிட்டர் செய்தி, ஜனவரி 21ன் இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்டத்திற்கும், கடந்த வியாழன் முதல் வரும் வாரம் வியாழன் வரை திருஅவையில் சிறப்பிக்கப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்திற்கும் நாம் நம்மை தயாரிக்க வேண்டும் என அழைப்புவிடுக்கிறது.

ஜனவரி 21ஆம் தேதி திருஅவையில் சிறப்பிக்கப்பட்ட இறைவார்த்தை ஞாயிறை ஒட்டி வத்திக்கான் தூய பேதுரு பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றும் திருத்தந்தை, அவ்வாரத்தில் கொண்டாடப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் பிற கிறிஸ்தவ சபை தலைவர்கள்

வாரத்தையொட்டி, புனித பவுல் மனம் திரும்பிய நாளான ஜனவரி 25ஆம் தேதி, அதாவது ஒன்றிப்பு வாரத்தின் இறுதி நாள் மாலையில் உரோம் நகரின் புனித பவுல் பெருங்கோவிலில் பிற கிறிஸ்தவ சபையினருடன் இணைந்து செபவழிபாட்டில் கலந்துகொண்டார்.
இவ்வாண்டின் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்திற்கென, ‘உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக’, என்ற விவிலிய வார்த்தைகள் தலைப்பாக எடுக்கப்பட்டுள்ளது.
அன்பு சகோதரரே, சகோதரிகளே, ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 18ம் தேதி முதல் 25 வரை கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான இறைவேண்டல் வாரத்தை நாம் கொண்டாடுகிறோம். மோதல்களாலும், பிரிவினைகளாலும் சிதறுண்டு நிற்கும் இவ்வுலகிற்கு நற்செய்தியை எடுத்துரைக்கும் நோக்கத்தில், நமக்கு, ஒன்றிப்பு எனும் கொடையை அருளுமாறு இறைத்தந்தையிடம் தனிப்பட்ட விதத்தில் இறைவேண்டலை மேற்கொள்ள, இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் அனைவரும் இவ்வாரத்தில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தன் மீட்பளிக்கும் பாடுகள் வழியாக கிறிஸ்து பெற்றுத்தந்த குணப்படுத்துதலையும், ஒப்புரவையும் நமக்கு வழங்கவேண்டும் என்பதே, நம் முதன்மை இறைவேண்டலாக, இந்த முரண்பாடுகள், மற்றும், பிரிவினைகளுக்கான பதிலுரையாக, இருக்க வேண்டும். 'எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!..... இதனால் உலகம் நம்பும்' (யோவா.17:21), என்ற இயேசுவின் இறுதி இரவு உணவு இறைவேண்டலில் நாமும் பங்குபெற்று, மீட்பை கண்டுகொள்ள அழைப்புப் பெற்றுள்ளோம். இந்த துன்பகரமான வேளைகளில், ஆண்டவரின் ஒப்புரவு அன்பிற்குச் சான்றுகளாக விளங்கவும், முழுமையான மற்றும் வெளிப்படையான ஒன்றிப்பின் பாதையில் நிலைத்திருக்கவும், கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக்கப் பெற்றுள்ளோம் என்று ரைத்தார் திருத்தந்தை.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்**

# பெஸ்தாரி ஜெயாவில் புனித வனத்து சின்னப்பர் பங்குத் திருவிழா

பெஸ்தாரி ஜெயா: இங்குள்ள புனித வனத்து சின்னப்பர் பங்கு பாதுகாவலரான புனித வனத்து சின்னப்பர் திருவிழா கடந்த வாரம் 10 ஜனவரி முதல் 14 ஜனவரி 2024 மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. அருள்பணி ஜேம்ஸ் கேபிரியல் மற்றும் அருள்பணி ஞானசெல்வம் அவர்களும் இணைந்து திருப்பலிகளை கொண்டாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் நாள் நவநாள் திருப்பலி மாலை 7.30 மணிக்கு செபமாலையத் தொடர்ந்து கொடியேற்றத்தோடு 8.00 மணிக்கு ஆரம்பமானது. ‘ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன்’ என்ற தலைப்பையொட்டி முதல் நாள் திருப்பலியையும் ‘உமது பேரன்பை முன்னிட்டு ஆண்டவரே எங்களை மீட்டருளும்’ என்ற 2ம் நாள் நவநாள் திருப்பலியையும் நிறைவேற்றினார் அருள்பணி ஜேம்ஸ் கேபிரியல் அவர்கள் .

தொடர்ந்து 3ம் நாள் 4ம் நாள் நவநாள் திருப்பலிகளையும் 5ம் நாள் திருவிழா திருப்பலியையும் பெஸ்தாரி ஜெயா பங்கின் மண்ணின் மைந்தர் மறைதிரு ஞானசெல்வம் அவர்கள் மிக உற்சாகத்துடன் மறையுரையாற்றினார். அவருக்கு கொடுக்கப்பட்ட தலைப்புகளாவன "நீ எழுந்து உனது படுக்கையை எடுத்துக் கொண்டு உனது வீட்டுக்கு போ" மற்றும் "ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன்" என்ற தலைப்புகளில் அனைவரையும் சிந்திக்க வைக்கும் வகையில் பேசி மக்களை ஈர்த்தார்.

முடக்குவாதமுற்றவனை இயேசுவிடம் தூக்கி வந்த தனது நண்பர்களை போன்றும் அங்கு கூடியிருந்த மக்கள் இயேசுவின் மேல்




அருள்பணியாளர்கள் ஜேம்ஸ் கேபிரியல் மற்றும் ஞானசெல்வம்

கொண்டிருந்த நம்பிக்கையை பற்றியும் மிக தெளிவாக அனைவரும் எளிதில் புரிந்துக் கொள்ளும் வகையிலும் கருத்துக்களைப் பகிரந்துகொண்டார்.

மேலும் இயேசுவோடு தங்கியிருத்தல் இறைவேண்டல் செய்தல், தியானித்தல் என்ற கருப்பொருளோடு புனித வனத்து சின்னப்பரின் வாழ்க்கை வரலாற்றையும் இணைத்து கூறி மறையுரையை நிறைவு செய்தார். சனிக்கிழமை திருப்பலிக்குப் பிறகு நற்கருணை ஆராதனையும் நற்கருணை பவனியும் நடைபெற்றது. இவ்வேளையில் பங்கு மக்களின் சார்பாக எல்லாம் வல்ல இறைவனுக்கும் நவநாள் மற்றும் திருவிழா திருப்பலி நிறைவேற்றிய அருள்பணி யாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

*-சகோதரி லில்லி சந்தனம்*




**1 பேதுரு 4:10 “நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள்கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே, உங்களுள் ஒவ்வொருவருக்கும் தாம் பெற்றுக் கொண்ட அருள்கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள்.”**

கடவுள் தொடக்கத்தில் உலகைப் படைத்தபோது, அதில் உள்ள அனைத்தும் எல்லா மனிதர்களாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்றும் இதனால் அனைவரின் தேவைகளும் பூர்த்தியாகி யாரும் பற்றாக்குறையால் பாதிக்கப்படக்கூடாது என்று விரும்பினார் (க.தி.ம குறிப்பு:2402). இருப்பினும், படைப்பாளரிடமிருந்து வரும் இந்த பரிசுகளை மனிதர்களிடையே சமமாக விநியோகிப்பது பலருக்கு கடுமையான பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. இதில் நம் திரு அவை ஏழைகளுக்கு ஒரு முக்கிய முன்னுரிமையை அளிக்க நம்மை அழைக்கிறது, அதாவது நாம் எப்பொழுதும் ஏழைகளின் பக்கம் நிற்க வலியுறுத்துகிறது. ஏழைகளை நேசிப்பது, அவர்களைப் பாதுகாப்பது மற்றும் அவர்கள் சார்பாகப் பேசுவது போன்ற அதே மனப்பான்மையுடன் கடவுள் அவர்களை அணுகுகிறார் என்று இறைவார்த்தை நமக்கு அறிவிக்கின்றது.(எ.கா. எசாயா *3:13-15*, லூக்கா:*10*, லூக்கா:*16*, மத்தேயு: *25*)

புனித கத்தோலிக்க திருஅவை ஒவ்வொரு மனிதனையும் கண்ணியத்துடன் நடத்துவதற்கு உரிமை உண்டு என்று கற்பிக்கின்றது. சமூகத்தில் உள்ள சில சமூக -பொருளாதார அமைப்புகள் இவர்களை ஏழைகளாகவும், பின்தங்கியவர்களாகவும் வைத்திருப்பதன் மூலம் மனித கண்ணியத்தை சமரசம் செய்கின்றன என்பது அநீதியாக கருதப்படுவதால் இது மாற்றப்பட வேண்டும் (**நற்செய்தியின் மகிழ்ச்சி**, *153*). மனித சமூகம், கடவுளின் படைப்பின் பொறுப்பாளர்களாக, தனது பங்கைப் பயன்படுத்தும் விதமும் இதில் அடங்குகின்றது.

கடவுள் படைத்த அனைத்தும் மனித குலத்திற்கு கொடுக்கப்பட்டது. படைப்பிலிருந்து கிடைக்கும் இயற்கை வளங்கள் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். இதனால் மனிதர்கள் மனிதர்களாக கடவுள் கொடுத்த கண்ணியத்துடன் வாழ முடியும். படைப்பின் வளங்கள் ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டும் வழங்கப்படாமல், எல்லா மக்களும் சிறந்த முறையில் வாழவும் உதவ வேண்டும். உலகின் பிற பகுதிகளில் வாழ்பவர்கள், படைப்பு வளங்களை அதிகமாக அனுபவிக்கும் அதே வேளையில், வறுமையில் உள்ளவர்கள், இவ்வளங்களை சிறிதளவே அனுபவிக்கிறார்கள்.

சமமான பகிர்வு மற்றும் வீணான பயன்பாட்டை நீக்கி அக்கறை காட்டுவதன் மூலம், படைப்பை கவனித்துக்கொள்வதுடன் வறுமையால் பாதிக்கப்படுபவர்களின் மீது பொறுப்பேற்றுக் கொள்வதற்கான ஒரு முக்கியமான வழியாகும். திருஅவையின் தோட்டத்தில் சில காய்கறிகளை நடவு செய்வதை விட இது மேலானது. நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நினைவூட்டுகிறது போல “ஓர் உண்மையான சூழலியல் அணுகுமுறை எப்போதும் ஒரு சமூக அணுகுமுறையாக மாறும் என்பதை நாம் உணர வேண்டும்; மண்ணுலகம் மற்றும் ஏழைகளின் அழுகை இரண்டையும் கேட்கும் வகையில், சுற்றுச்சூழல் மீதான ஆய்வுகளில் நீதியை பற்றிய கேள்விகளை அது ஒருங்கிணைக்க வேண்டும்" (புகழனைத்தும் உமதே! Laudato Si, 49).

படைப்பிற்கான நமது அக்கறை படைப்பிற்காக வெளிப்படுத்தப்படுவதல்ல, மாறாக, கடவுள் இயற்கையையும் அதில் உள்ள அனைத்து வளங்களையும் மனித குலத்திற்காகவே படைத்தார். படைப்பின் தேவையற்ற சுரண்டலினால், மனிதகுலத்தில் இந்த இயற்கை வளங்களை அனுபவிக்கும் உரிமையை இழந்தவர்கள் இந்த தலைமுறையிலும் அடுத்த தலைமுறையிலும் இருக்கிறார்கள் இருப்பார்கள் என பொருள்படும். (புகழனைத்தும் உமதே! Laudato Si, 1 5 9 ) இயற்கையை சுரண்டுவது என்பது சக மனிதனை சுரண்டுவதாகும். "ஒரு ஏழையின் மதிப்பை யதார்த்தத்தின் ஒரு பகுதியாக நாம் ஒப்புக் கொள்ளத் தவறினால்... இயற்கையின் அழுகையைக் கேட்பது கடினமாகிறது; ஏனெனில், எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது (புகழனைத்தும் உமதே! Laudato Si, 117).

படைப்பின் சுரண்டலால் எழும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப் பற்றி நாம் பேசும்போது, கிரகத்தின் அமைப்புகளான காற்று, நீர் மற்றும் மண் போன்றவற்றின் சிக்கல்கள் ஏற்படுவதற்கு காரணம் மனிதர்கள் அதைத் தவறாக நடத்துவதன் விளைவினால் எழுகிறது எனக் கருதப்படுகிறது. நமது கிரகம் இப்போது கடுமையான சுற்றுச்சூழல் நெருக்கடியின் ஒரு கட்டத்தில் வந்துள்ளது, ஏனெனில் இந்த சிக்கல்கள் நமது தலைமுறையையும், வரவிருக்கும் தலைமுறையையும், இயற்கைக்கு மாறான பேரழிவுகள் மற்றும் துயரங்களுக்கு கொண்டு செல்வது மட்டுமல்லாமல் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாக ஆக்கியுள்ளது. இருப்பினும், எப்பொழுதும் நம்பிக்கை உள்ளது: எப்படி என்றால், "நாம் மேலே உயர"... "மீண்டும் நல்லதைத் தேர்ந் தெடுக்க"... முயன்று "புதிய தொடக் கத்தை உருவாக்க" ஒரு தேர்வு செய்யலாம்! (புகழனைத்தும் உமதே! Laudato Si, *205*)

## ‘மறைக்கல்வி என்பது .....’ சிந்தனைக்கு

நம் சமய உண்மைகளையும் கோட்பாடுகளையும் அறிவுபூர்வமாக நாம் கற்றுக்கொள்ளும் ஒரு படிப்பு மட்டுமல்ல. நமது வாழ்வின் ஒவ்வொரு அனுபவத்திலும் நிகழ்விலும் சிறப்பாகக் காலத்தின் அறிகுறிகளிலும் கடவுள் நம்மைச் சந்திக்கின்றார். அவருடைய அன்பு மக்களுக்குரிய உறவோடும் உரிமையோடும் மாண்போடும் மகிழ்வோடும் நாம் வாழவும் வளரவும் நமக்கு அழைப்பையும் அருளையும் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றார்.

இந்த இறையனுபவத்தை நாம் இனம் கண்டு வாழ்க்கை அனுபவமாக மாற்றி, இறையாட்சியின் மனிதர்களாகவும் குழுமங்களாகவும் நாம் உருவாகி, உலக சமூகத்தையே அன்பிலும் நீதியிலும் செயல்படும் இறையாட்சியாக உருமாற்ற வேண்டும்.

இத்தகைய நம்பிக்கையின் உருவாக்கமே மறைக்கல்வி. அதாவது இயேசுவின் மனநிலையுடன் நாம் வாழவும் உறவாடவும் சமூகத்தில் செயல்படவும் வேண்டிய நம்பிக்கையின் புரிதலையும் உறுதிப்பாட்டையும் மறைக்கல்வி நமக்குத் தர வேண்டும்.

மறைக்கல்வி என்பது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர வேண்டிய ஒரு முயற்சியும் பயிற்சியுமாகும். இது வாழ்நாளெல்லாம் தொடர்ந்து நடைபெற்று நமது நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அளிக்க வேண்டும்.

எனவே, இது வகுப் பறைக்கோ, சிறார்களுக்கோ மட்டுமே உரியது என்னும் புரிதல் தவறானது. இது கிறிஸ்தவ வாழ்வின் எல்லா நிலைகளிலும் சூழமைவிலும் தொடர்ந்து நடைபெற வேண்டியது என்பதை உணர்வோமாக.

# கிறிஸ்துவின் அதிகாரம் நம்மை ஆளட்டும்

இன்று ஆண்டின் பொதுக்காலம் 4ம் ஞாயிறுவில் இணைந்துள்ள நாம் பெற்றுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மக்களை சரியான பாதையில் வழி நடத்தி செல்லவேண்டியதன் அவசியம் குறித்து சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினனைத் தேர்ந்தெடுத்து, என் வார்த்தைகளை அவன் வாயில் வைப்பேன். அவனை வல்லமையாக்குவேன் என்கிறார் இறைவன். இறைக்கட்டளையில்லாமல் தானாக பேசும் போலி இறைவாக்கினனை வேரறுப்பேன் என்கிறார். இன்றைய இரண்டாம் வாசகத்தில் “நீங்கள் கவலையற்றவராய் இருங்கள்” என்று பவுல் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தியில், “இயேசு, அதிகாரத்தோடு அவர்களுக்கு கற்பித்து வந்ததார்” என்றும், தீய ஆவியை விரட்டிய பின்னர், மக்கள், இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே” என்று வியப்பில் ஆழ்ந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆம், சில நேரங்களில் சில இடங்களில், சில மனிதர்களிடம் நாம் அதிகாரத்துடன் நடக்க வேண்டிய நிலை உள்ளது. இறைமகனும் அன்று ஆலயத்தில், நாணயம் மாற்றுவோரையும், புறா விற்போரையும் கண்டு கயிறுகளால் சாட்டை பின்னி கோவிலில் இருந்து விரட்டினார் என்றால், அந்த இடத்தில் அந்த மனிதர்களிடத்தில் அவர் இரக்கம் காட்டவில்லை. “இறைஇல்லம”; என்ற உணர்வு அவரை அதிகாரத்துடன் கண்டிக்க வைத்தது.

மண்ணுலகை ஆள அதிகாரத்தை மனிதர்க்கு கொடுத்தார். தம் சீடர்களுக்கு தீயஆவிகளை ஓட்டவும், நோய்களை குணமாக்கவும் அதிகாரம் கொடுத்தார். அவர்கள் முறையான வழியில் அதை அவர்கள் இறுதிவரை சரியாக பயன்படுத்தினர். இன்று கணவன், மனைவி, மாமியார், என ஒவ்வொருவரும் அதிகாரத்துடன் பிறரை அடக்கி ஆள முற்படுகின்றனர். இது வளர்ச்சிக்கான வழியல்ல. புனித பவுல், “உங்கள் அழிவுக்காக அல்ல, வளர்ச்சிக்காகவே ஆண்டவர் இந்த அதிகாரத்தை எனக்கு அளித்துள்ளார்” *(2* கொரி.*13:10)* என கொரிந்திய மக்களிடம் கூறுகிறார். அத்தகைய ஒரு மனநிலை நம்மிலே வளர வேண்டும்.

பதவி, பட்டம், பணம் இவற்றால் வரக்கூடிய அதிகாரத்தினால் வரும் சுகம் இறைவனுக்கு எதிரானது. தீயசக்திகளை ஒழிக்கவும், ஆக்கப்பூர்வமான ஆற்றல்களை வெளிக்கொணரவும் செய்வது இறை அதிகாரம். அரச குருத்துவ திருக்கூட்டத்தில் இணைந்திருக்கின்ற இறைமக்கள் எல்லாருக்கும் அவ்வதிகாரம் தரப்பட்டிருக்கின்றது. இடித்துரைக்கவும், எடுத்துரைக்கவும், கட்டியெழுப்பவும், தட்டி வளர்க்கவும் அந்த அதிகாரத்தை பயன்படுத்துகின்ற போது உலகம் புத்துயிர் பெறும்.

ஆகையால், இறைப்பணியைச் செய்யும் இறைவாக்கினர்கள் இறைவனின் அடியார்கள் என்பதை உணர்வது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. அது நேரத்தில் இறைவாக்கினர்களுக்கு எல்லாம் பெரிய இறைவாக்கினராகிய இயேசுவை ஏற்றுக் கொள்வதைக் கொண்டே நம்முடைய வாழ்வும் மீட்பும் அடங்கி இருக்கின்றது. ஆகவே, நம் மத்தியில் இறைப்பணி செய்யும் இறையடியார்களுக்கு உரிய முக்கியத்துவம் தருவோம், இயேசுவே உண்மையான இறைவன், இறைவாக்கினருக்கு எல்லாம் பெரிய இறைவாக்கினர் என்பதை உணர்வோம். அவருக்கு உகந்த வழியில் நடப்போம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

**ஆண்டின் பொதுக்காலத்தின் 4-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | இ.ச. *18: 15-20* |
| திரு.பாடல் | *94: 1-2.6-9* |
| 2-ம் வாசகம் | *1* கொரி *7:32-35* |
| நற்செய்தி | மாற்கு *1: 21-28* |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- தவாரம் 4**